Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.266/2019

**Depositions of PW- 3**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.செல்லப்பாண்டியன் | Occupation | சார்பு ஆய்வாளர் |
| Father's name | பால்ச்சாமி | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 11th day of May 2026.

11.05.2026

எதிரிகள் ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

முதல் விசாரணை

நான் தற்போது திருவில்லிபுத்தூர் தாலுகா காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு திருவில்லிபுத்தூர் நகர் காவல்நிலையத்தில் பணிபுரிந்தபோது கடந்த 24.04.2016 அன்று 14.30 மணிக்கு திருவில்லிபுத்தூர் நகர் காவல்நிலைய பொறுப்பிலிருந்தபோது ஷேக் அலி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.288/2016 பிரிவுகள்.294(b), 427, 506(1)இதசவின் கீழ் வழக்கு பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அசாஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அவ்வாறு பதிவு செய்த அசல் முதல் தகவல் அறிக்கையையும் வாதியின் புகார்மனுவையும் இணைத்து சம்மந்தப்பட்ட நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். வழக்கு விசாரணைக்காக வழக்கு கோப்பை சார்பு ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–

முதல் தகவல் அறிக்கையில் சம்பவமானது 24.04.2016 அன்று சரியாக மதியம் 01.30 மணிக்கு நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்திலிருந்து 1 மணிநேரம் கழித்து தான் எங்கள் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஏற்பட்ட காலதாமதம் பற்றி

முதல் தகவல் அறிக்கையின் காலம் 8ல் குறிப்பிட்டிருக்க வேண்டும் என்றால் காலதாமதம் ஏற்பட்டால் தான் அதுபற்றி கூற வேண்டும். காலதாமதம் ஏற்படாததால் அதுபற்றி கூறவில்லை. எங்கள் காவல்துறை ஆணையின்படி காலதாமதம் ஏற்படும் நேரத்தை குறிப்பிட்டு முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடத்திலிருந்து எங்கள் காவல்நிலையத்திற்கு 10 நிமிடங்களில் வந்துவிடலாம் என்றால் அது புகார் கொடுப்பவரின் நிலைமையை பொருத்து உள்ளது. முதல் தகவல் அறிக்கையின் காலம் 5ல் சம்பவம் நடந்த இடத்திலிருந்து 500 மீட்டர் தொலைவில் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

இவ்வழக்கின் புகார் மனுவை மேற்படி நபர் காவல்நிலையம் வரும்போதே எழுதி எடுத்துவந்தார். புகார் மனுவிலும் முதல் தகவல் அறிக்கையிலும் பின்னர் விசாரித்து தெரிந்துகொண்ட நபர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. புகார் மனுவிலும் முதல் தகவல் அறிக்கையிலும் பிரியாணி தயார் செய்யும் பாத்திரங்களை சேதப்படுத்தியதாக மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் அதை யார் சேதப்படுத்தினார்கள் என்று குறிப்பிட்டு கூறப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி காலதாமதம் பற்றி குறிப்பிடப்படாததாலும் எதிரிகளின் பெயர் விலாசம் குறிப்பிட்டு சொல்லப்படாததாலும் இவ்வழக்கானது எனது மேல் அதிகாரிகளின் அறிவுறுத்தலின் பேரில் எதிரிகள் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.